முதன்மை மாவட்ட நீதிமன்றம், தஞ்சாவூர்

IDOP 150/2022

எதிர் தரப்பு 2 வது சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு திரு. அ.கஜேந்திரன், கிரேடு -1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தவமணி | வயது | : | 60 |
| கணவர் பெயர் | : | தமிழ்செல்வம் | தாலுக்கா | : | திருவிடைமருதூர் |
| கிராமம் | : | பெரப்படி | தொழில் | : | வீட்டு குடித்தனம் |

நாள் : 21-01-2026

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

1) நிருபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நான்தான் என் வழக்கறிஞரிடம் கூறினேன்.

2) என் மகள் வேலை பார்க்கவில்லை. பி.ஈ படித்துள்ளார்.

3) திருமணத்திற்கு முன் என் மகள் மாதம் ரூ.10 ஆயிரம் சம்பளம் பெற்று வந்தார்.

4) என் மகளுக்கு என் மருமகன் நீதிமன்ற உத்தரவு படி ரூ.10 லட்சம் கொடுத்துவிட்டார். அதற்கான ரசீது நகல்தான் என்னிடம் காட்டப்படுவது. அது ம.சா.ஆ.12 ஆகும்.

5) எனது மகளின் வங்கி கணக்கிற்கு மாதம் மாதம் ரூ.20 ஆயிரம் கொடுத்து வருகிறார். அதை காட்டக்கூடிய ஸ்டேட்மெண்ட் இதுதான்.அது ம.சா.ஆ.13 ஆகும். அதை நீதிமன்ற உத்தரவிற்கு பிறகு 3 மாதமாக கொடுத்து வருகிறார்.

6) அவர் பிரிந்த பிறகு சுமார் 6 வருடங்களாக மாதம் ரூ.7 ஆயிரம் கொடுத்து வந்தார் என்றும் தற்போது நீதிமன்ற உத்தரவு படி ரூ.20 ஆயிரம் கொடுத்து வருகிறார் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தபிறகு தான் ரூ.7 ஆயிரம் கொடுத்தார். அதன்முன்பு கொடுக்கவில்லை.

7) குடும்ப வன்முறை வழக்கிற்கு பிறகு கொடுத்து வருகிறார் என்றால் சரிதான்.

8) என்னிடம் காட்டப்படும் பத்திரிக்கை எனது மகளின் திருமண வரவேற்பு பத்திரிக்கை என்றால் சரிதான். அதில் எனது பெயர் சாராதவமணி என்று உள்ளது என்றால் சரிதான்.

அதில் என் தங்கை பெயர் S.விஜயா என்று உள்ளது என்றால் சரிதான். அவர் எஸ்.பி அலுவலகத்தில் வேலை பார்க்கிறார் என்றால் சரிதான். அந்த திருமண பத்திரிக்கை அசல் ம.சா.ஆ.14.

9) 31.1.2023 அன்று கன்னியாகுமரியில் உள்ள சமூகதுறை அலுவலகத்திற்கு நாங்கள் குடும்பத்தோடு விசாரணைக்கு சென்றோம் என்றால் சரிதான். சுமாராக 10 பேர் போய் இருப்போம் என்றால் சரியல்ல. 7 நபர்கள்போனோம். அங்கு விசாரணை முடிந்து வெளியே வரும்போது எனக்கும் என் மருமகனுக்கும் கை தகறாறு ஏற்பட்டது என்றால் சரியல்ல. காவல்துறை அதிகாரி அன்று என்னை விசாரிக்கவில்லை. அன்று என் மருமகனுக்கு சட்டை கிழிந்தது என்றால் சரியல்ல. நாங்கள் கிழிக்கவில்லை.

10) நான் என் மருமகனை அடித்து சட்டையை கிழித்தேன் என்றும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

11) என் மகள் எங்கள் சொந்தகாரர்களிடம் எல்லோரிடமும் என் மருமகனுக்கு ஆண்மை குறைவு என்று சொல்லி வந்தார் என்றால் சரியல்ல.

12) கன்னியாகுமரியில் வழக்கு போடுவதற்கு ஒரு புகார் ( ம.சா.ஆ.5) மனு எழுதி கொடுத்தோம் என்றால் சரிதான். அந்த புகார் மனுவில் என் கணவர் என்னுடன் தாம்பத்தய சந்தோஷத்தில் வாழ மறுக்கிறார் இது அவரது உடல் ரீதியான சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என்று கண்டுள்ளது என்றால் அதுபோல் நாங்கள் எழுதி கொடுக்கவில்லை.

13) அந்த புகார் மனுவின் பேரில்தான் முதல் தகவல் அறிக்கை ( ம.சா.ஆ.4) பதிவு செய்யப்பட்டது என்றும் அதில் என் மகள் என் கணவர் என்னுடன் தாம்பத்தய சந்தோஷத்தில் வாழ மறுக்கிறார் இது அவரது உடல் ரீதியான சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என்று சொல்லியிருக்கிறார் என்றால் அப்படி என் மகள் சொல்லவில்லை.

14) 1.4.2019 அன்று ( ம.சா.ஆ.11) ஒரு புகாரை என் மகள் அனைத்து மகளிர் காவல்நிலையம், நாகர்கோவிலில் கொடுத்தார் என்றால் சரிதான். என் மகள் என் மருமகனுடன் சேர்ந்து வாழவேண்டும் என்பதற்காக கொடுத்தேன். அந்த புகாரில் ரூ-4 லட்சம் கொடுத்தாக எழுதப்பட்டிருக்கிறதா என்றால் எனக்கு இதுபற்றி தெரியாது. ஆனால் ரூ.6 லட்சம் கொடுத்தேன்.

15) எந்த தேதியில் என் மகளை என் மருமகன், மாமனார் கொடுமைப்படுத்தினார் என்று நிருபண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லவில்லை.

16) என் மகள் என் மருமகனுடன் திருமணத்திற்கு பிறகு 1 வாரம் மட்டும்தான் சேர்ந்து வாழ்ந்தார்கள். அதன்பிறகு சேர்ந்து வாழவில்லை.

17) திருமணத்திற்கு பிறகு எனது மகளும் எனது மருமகனும் ஒரு நாள் என் வீட்டிற்கு வந்தார்கள். மறுநாள் புறப்பட்டு நாகர்கோவில் போய் 2,3 நாட்கள் சந்தோஷமாக வாழ்ந்தார்கள். அதன்பிறகு வெளிநாட்டிற்கு போனார்கள். வெளிநாட்டில் இருந்து திரும்பி வந்தபிறகு நாகர்கோவிலுக்கு என் மகள் போய் இரண்டு மாதங்கள் இருந்தார்.

18) நிருபண வாக்குமூலத்தில் . வெளிநாட்டில் இருந்து திரும்பி வந்தபிறகு நாகர்கோவிலுக்கு என் மகள் போய் இரண்டு மாதங்கள் இருந்தார் என்பதை மறைத்துவிட்டு 2 நாட்கள் மட்டும் வாழ்ந்தார்கள் என்று பொய்யாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல.

19) எனது மகளுக்கும் மருமகனுக்கும் குழந்தை பிறக்கவில்லை என்றால் சரிதான்.

20) எனது மருமகன்மற்றும் அவரது பெற்றோர்களுக்கு எதிராக கன்னியாகுமரி காவல்நிலையத்தில் நான் புகார் கொடுத்து அந்த வழக்கு கன்னியாகுமரி நடுவர் நீதிமன்றத்தில் இன்று வரை நடந்து வருகிறது என்றால் சரிதான்.

21) எனது மகள் எனது மருமகனுடன் சேர்ந்து வாழவேண்டும் என்று தனியாக வழக்கு தாக்கல் செய்திருக்கிறார். அவ்வாறான வழக்கு தாக்கல் செய்யாமலேயே தாக்கல் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

22) புகார் மற்றும் எதிர்உரை, நிருபண வாக்குமூலம் ஆகியவற்றில் மனுதாரர் என் மகளிடம் வரதட்சணை கேட்டதாக சொல்லி இருக்கிறேன் என்றால் தவறு. சொல்லி இருக்கிறேன்.

23) எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லி உள்ள விபரங்கள் நான் சொல்லவில்லை.

24) மனுதாரர் என் மகளுடன் சேர்ந்து வாழமாட்டார் என்றும் அவர் மீது பல பொய்யான தகவல்கள் சொல்லி புகார் கொடுத்ததால் அவர் என் மகளுடன் சேர்ந்து வாழமாட்டார் என்று சொன்னால் சரியல்ல.

25) இந்த மனு அனுமதிக்கப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஓம்/-P. வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்